# அகில இந்தியக் குடிமைப் பணித் தேர்வுப் பயிற்சி மையம்

"காஞ்சி" பசுமைவழிச்சாலை, சென்னை-28.

## பத்திரிக்கைச் செய்தி

குடிமைப் பணிகளுக்கான (இ.ஆ.ப, இ.கா.ப) முதல்நிலைத் தேர்வு முடிவுகள்

தமிழ்நாடு அரசால் நிர்வகிக்கப்படும் சென்னையிலுள்ள அகில இந்திய குடிமைப்பணித் தேர்வு பயிற்சி மையத்தில், மத்திய தேர்வாணையத்தால் நடத்தப்படும், அகில இந்திய குடிமைப் பணிகளுக்கான தேர்வுகளை எதிர்கொள்ளும் ஆர்வலர்களுக்கு முதல் நிலைத் தேர்வு, முதன்மைத் தேர்வு, மாதிரி ஆளுமைத் தேர்வுகளுக்கான பயிற்சி வகுப்புகள் அளிக்கப்பட்டு வருகின்றன. கிராமபுரங்களில் உள்ள ஏழை எளிய குடும்பங்களைச் சார்ந்த ஆர்வலர்கள் பயன்பெறும் வகையில், இப்பயிற்சி மையம் கடந்த 59 ஆண்டுகளாக இலவச பயிற்சியினை வழங்கி வருகிறது.

அமைதியான சூழலில் அமைந்துள்ள இப்பயிற்சி மையத்தில் வகுப்பறைகள், தங்கும் இடவசதி, தரமான உணவு, கணினி மயமாக்கப்பட்ட நூலகம் உள்ளிட்ட அனைத்து வசதிகளும் அமைந்துள்ளன. சிறந்த பயிற்றுநர்களைக் கொண்டு பயிற்சி அளிப்பதுடன், ஆர்வலர்கள் தங்களை தேர்வுக்குத் தயார்படுத்தி கொள்ளும் வகையில் மாதிரித் தேர்வுகளும் நடத்தப்படுகின்றன.

கடந்த 25.05.2025 அன்று நடைபெற்ற குடிமைப்பணி முதல்நிலைத் தேர்வில் இப்பயிற்சி மையத்தில் பயிற்சி பெற்று தேர்வு எழுதிய தேர்வர்களில் 98 ஆர்வலர்கள் தேர்ச்சிப் பெற்றுள்ளார்கள். இவர்களில் 26 பெண் ஆர்வலர்கள் 2 மாற்றுத்திறனாளி என்பது குறிப்பிடத்தக்கது. இவர்களுக்கு 14.10.2024 முதல் 24.05.2025 வரை உண்டி உறைவிடத்துடன் கூடிய அறைகள் வழங்கப்பட்டு கட்டணமில்லா பயிற்சி வகுப்புகள் நடத்தப்பட்டன. முழுநேர ஆர்வலர்களுக்கு நடப்பாண்டில் 34 நேரடி தொடர் தேர்வுகள் நடத்தப்பட்டன.

குடிமைப்பணி முதல்நிலைத் தேர்வில் தேர்ச்சி பெற்றுள்ள ஆர்வலர்களுக்கு ஜூன் 2025 முதல் ஆகஸ்டு -2025 வரை மூன்று மாதங்களுக்கு முதன்மைத் தேர்வு பயிற்சி வழங்கப்பட உள்ளது. இப்பயிற்சி மையத்தில் பயிற்சி பெற்ற ஆர்வலர்கள் மட்டுமன்றி, குடிமைப்பணி முதல்நிலைத் தேர்வில் தேர்ச்சி பெற்ற தமிழ்நாட்டைச் சார்ந்த இதர ஆர்வலர்களும் இப்பயிற்சி மையத்தில் சேர்ந்து பயிற்சி பெறலாம். பயிற்சி பெறக்கூடிய மூன்று

மாத காலத்திற்கும் ஊக்கத் தொகையாக ரூ.25,000/- "நான் முதல்வன்" திட்டத்தின் கீழ் வழங்கப்படும்.

அகில இந்தியக் குடிமைப் பணித் தேர்வுப் பயிற்சி மையத்தில் சேர விரும்பும் ஆர்வலர்கள் 14.06.2025 (சனிக்கிழமை) காலை 6.00 மணி முதல் 15.06.2025 (ஞாயிற்றுக்கிழமை) மாலை 06.00 மணி வரை www.civilservicecoaching.com என்ற இணையத்தில் தங்கள் விவரங்களை பதிவு செய்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். இட ஒதுக்கீட்டின்படி தெரிவு செய்யப்பட்ட ஆர்வலர்கள் விவரம் 15.06.2025 (ஞாயிற்றுக்கிழமை) இணையத்தில் வெளியிடப்பட்டு, 16.06.2025 மற்றும் 17.06.2025 ஆகிய இரு நாட்களில் சேர்க்கை நடைபெறுவதோடு , 18.06.2025 முதல் முதன்மைத் தேர்விற்கான பயிற்சி வகுப்புகள் தொடங்கப்படும்.

அரசு விதிகளுக்குட்பட்டுப் பதிவு செய்தவர்களில், 225 ஆர்வலர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு தங்கும் வசதிகளுடன் குடிமைப்பணி முதன்மைத் தேர்வுக்குப் பயிற்சியளிக்கப்பட உள்ளார்கள்.

மேலும் விவரங்களுக்கு 044-24621475 என்ற தொலைபேசி எண் வாயிலாகவும், 9345766957 என்ற புலன எண் (வாட்ஸ்-அப்) மூலமாகவும், : www.civilservicecoaching.com என்ற இணையதள முகவரியிலும் தொடர்பு கொள்ளலாம்.

கூடுதல் தலைமைச் செயலாளர்/
பயிற்சித் துறைத் தலைவர்

12/6/25

All India Civil Services Coaching Centre
"Kanchi",Greenways Road, Chennai-28.

**PRESS RELEASE**

Union Public Service Commission (IAS, IPS,) Preliminary Results

The Government of Tamil Nadu conducts coaching classes for Preliminary Exams, Mains Exams and Model Personality Test for the aspirants who are actively preparing for the All India Civil Services Examinations conducted by Union Public Service Commission at All India Civil Services Coaching Centre, Chennai. This Centre empowers aspirants from rural and poor backgrounds by offering free coaching for UPSC Civil Service Exams for the past 59 years.

All facilities like classrooms, accommodation, hygienic food, computerized library, etc. are provided in the centre surrounded peacefully. Model tests are conducted to the aspirants for facing the examination confidently and the coaching is given by the well-versed faculties.

98 aspirants from this centre have now cleared UPSC preliminary exam conducted on 25.05.2025. Out of these, there are 26 female aspirants and 2 differently abled persons. This centre has been providing comprehensive support to the aspirants of UPSC Preliminary exam including free coaching, boarding from 14.10.2024 to 24.05.2025 and various test series options. A total of 34 test series were conducted to the aspirants.

All India Civil Services Coaching Centre will provide free coaching classes from June-2025 to August – 2025 for the Mains Exams to the candidates who passed the UPSC Preliminary Exam 2025. This facility is open to all the aspirants who have cleared UPSC preliminary exam from all over Tamil Nadu. In order to encourage the participants, a lump sum amount of Rs. 25,000/-will be provided under the "Nan Mudhalvan" scheme.

Aspirants who are willing to join All India Civil Services Coaching centre for their Mains exam preparation are informed to register the website at www.civilservicecoaching.com. from 14.06.2025 (Saturday) 6.00 AM to 15.06.2025 (Sunday) till 6.00 PM. The details of aspirants selected as per the quota will be published on the website on 15.06.2025. Admission process will commence on 16.06.2025 (Monday) and 17.06.2025 (Tuesday) respectively. The coaching classes for the UPSC Main exam will commence from 18.06.2025. 225 shortlisted aspirants selected as per the rules are given free coaching with boarding facilities for the UPSC Main examination.

For further details can contact the centre through the phone number 044-24621475, WhatsApp No. 9345766957 and website www.civilservicecoaching.com.

Additional Chief Secretary/
Director General of Training

12/6/25